[1975 மார்ச் 14

* 321 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) Whether it is a fact that the State Government has recommended to the Centre in recent times to increase the monthly income limit for medical benefits under Employees' State Insurance Scheme;

(*b*) if so, whether any reply has been received ; and

(*c*) the details of the reply ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) & (உ) அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் பலனடையும் வகையில் அவர்களின் மாத ஊதிய வரம்பினை அவ்வப்போது உயர்த்துவதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதி சட்டத்தைத் திருத்தும்படி தாம் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளதாக புது டில்லியிலுள்ள அரசு தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. மத்திய அரசின் முடிவு இதுவரையில் தெரியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: பெருவாரியாக டெக்ஸ்டைல்ஸ் மில்கள், இன்ஜினீரிங் டிபார்ட்மெண்ட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, தொழிலாளிகள் பஞ்சப்படி, சம்பளம் எல்லாம் சேர்த்து ரூபாய் 500-க்கு மேல் பெறுகிறார்கள். 8 தம்படி அதிகமானாலும் அவர்களுக்கு பெனிபிட் கிடைப்பதில்லை. இதை சர்க்கார் முக்கியமாக எடுத்து மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தக் குறைபாடு பொறுத்த வரை அரசு அறிந்திருக்கிறது. ஆயிரம் ரூபாய் வரையில் உயர்த்த வேண்டுமென்று மத்தியரசுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறோம். எங்கள் ஆலோசனையை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: விலைவாசி காரணமாக ரூபாய் 500-க்கு மேல் வருமானம் வருகிறது. இப்படி உள்ளவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் தொழிலாளர்கள் வைத்திய வசதி பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் மீண்டும் எடுத்துச் சொல்லி, இதை உடனடியாக ரூ. 500-க்கு மேல், ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். கேரளத்தில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம். அவர்கள் ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதுமாதிரி தமிழ் நாட்டில் ஏன் அப்படி செய்ய விரும்பவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 14

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது தொழிலாளர் சங்கத் தலைவர்கள் கூடுகிற ஈ.எஸ்.ஐ. ஆலோசனை குழுக் கூட்டத்தில் ஓராண்டு காலமாகப் பேசப்பட்டது. தமிழக அரசின் சார்பில் ஆயிரம் ரூபாய் வரையில் வழங்கலாம் என்று தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு தெரிவிக்கப்பட்டு, அவர்களும் அந்தக் கொள்கையை ஒத்துக் கொண்டு, மத்திய சர்க்காருக்கு தெரிவித்து, அதை அந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளாத கோரிக்கை மீது தமிழ்நாடு தனியாக ஒன்றும் செய்ய முடியாது..

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது, 1973 அக்டோபர் மாதத்தில் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ததாகச் சொன்னார்கள். சிபாரிசு செய்து 1½ ஆண்டு காலத்திற்கு மேல் ஆகி விட்டது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் இன்றைக்கு ரூபாய் 500-க்கு மேல் சம்பளம் பெற்றும், மருத்துவ வசதியில்லாமல் இருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு தீர்மான வடிவில் கொண்டு வந்து, மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாம் ரீஜினல் போர்டு ஆப் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் என்கிற தலைப்பின்கீழ் நடைபெற்ற மாநாட்டில் 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதற்கான ஆலோசனைகள் சொல்லியிருக்கிறது. இதிலே இருக்கிற சிக்கல் "ஒர்க்மென்" "தொழிலாளி" என்பதற்கான விளக்கங்களை சில மாறுதல்களை சட்டப்பூர்வமாக மத்திய அரசு உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கிய பிறகு அதற்கான முடிவை மத்திய அரசு எடுக்க முடியும். அந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் நிறை வேற்றும் வரையில் பொறுத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

திரு. எ. சுப்பிரமணியம் : மத்திய அரசு ரூ. 500 என்கின்ற உச்ச வரம்பை ஆயிரம் ரூபாய் என்று உயர்த்துவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தகவல் சரியல்ல., மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அரசு ஈட்டுறுதிக் கழக ஆலோசனைக் குழுவில் பேசும் போது சொன்னார்கள். இந்த நாடாளுமன்ற தொடர் கூட்டத்தில் அதற்கான சட்டம் வரும் என்று அறிவித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தத் தகவல் எனக்குத் தெரியும். ஆனால் தகவல்களில் இருக்கிற குறைபாடு என்னவென்றால் கேபினட் அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது அவர்கள் கேபினெட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இன்னும் அறிவிக்கவில்லை. கொள்கையளவில் அந்தக் கொள்கையை ஒத்துக்கொள்கிறேன் என்று தான் சொல்லியிருக்கிறார். அதை காபினட் ஏற்றுக்கொண்டு, பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்கிற வரையில் நடைமுறையில் கொண்டு வர முடியாது.

1975 மார்ச் 14]

திரு. இரா. இராமலிங்கம் : இந்த வருமான அடிப்படையில் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆஸ்பத்திரியில், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இருந்தால், அவர்களுக்கு கட்டணம் வசூலிக்கிறார்கள். அதைத் தவிர்க்க, தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லா விதமான இலவச மருத்துவ வசதிகளும் கிடைக்குமாறு மத்திய அரசுக்கு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிலாளர்கள் குடும்பத்திற்கு வைத்திய வசதி பெற மருத்துவ மனைகள் மக்கள் நல்வாழ்வுத் துறையில் கட்டப்பட்டிருக்கிறது. இது தொழிலாளிகளுக்கு தனியாக கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனை. மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த உச்ச வரம்பை ஆயிரம் ரூபாய் என்று ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தை பல இடங்களில் தெரிவித்திருக்கிறார்கள். இதை விரைவில் சட்டபூர்வமாக செய்யவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : மத்திய அமைச்சர் ரூபாய் 500-லிருந்து ஆயிரம் ரூபாய் உயர்த்துவதற்கு கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது குறித்து. . . . .

MR. DEPUTY SPEAKER : This is a question of policy matter. . .

திரு. எ. சுப்பிரமணியம் : இது பாலிசிமேட்டர் இல்லை, தவறான பதில்களுக்கு சில விளக்கம் பெற வேண்டும் என்பதுதான்.

MR. DEPUTY SPEAKER : When the Minister gives false information, according to the hon. Member, he can raise a point of privilege. He is not the spokesman of the Central Government here. I am not allowing him to speak. . . .

பொள்ளாச்சி சரகத்தில் தேக்கு மரங்கள்.

*322 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வன சரகத்தைச் சேர்ந்த "டாப்சிலிப்" என்ற பகுதி அரசாங்க காட்டில் உள்ள தேக்கு மரங்கள் எவையேனும் 1973 டிசம்பர் மாதத்தில் களவு போயினவா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்புள்ள தேக்கு மரங்கள் களவு போய் உள்ளன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(ஆ) களவு போன மரங்களின் மொத்த மதிப்பு ரூ. 68,446.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வன பாதுகாப்புக்காக அதிகாரிகள் இருக்கிறார்கள். இது எப்படி களவு போனது, களவாடியவர் யார், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.